Virtual Schools

ஜனவரி 2021

Toronto District School Board

**TDSBஇன் மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்களுக்கான செய்திமடல்**

**மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள் !**

இந்த ஆண்டின் ஆரம்பம் சவாலானதாக இருப்பினும், அனைத்து மாணவர்களும் குடும்பத்தவர்களும் தற்போதைய சூழ்நிலையைச் சிறப்பாகக் கையாள்கிறார்கள் என நாங்கள் நம்புகிறோம்.

வகுப்பறைகளில் நிகழ்கின்ற சிறப்பான விடயங்களைப் பற்றித் தொடர்ந்தும் நாங்கள் அறிந்துகொண்டிருக்கிறோம், அத்துடன் மாணவர்களின் விடாமுயற்சியை நாங்கள் மெச்சுகிறோம். தொடர்ந்து, இணையக் கற்றல் சூழலைத் நாங்கள் வழிநடத்தும்போது தொடர்ச்சியாகக் கிடைக்கின்ற பெற்றோர்/ பாதுகாவலர்களின் கூட்டாண்மைக்கு அனைத்து ஆரம்பநிலை மெய்நிகர் பாடசாலைப் பணியாளர்களின் சார்பிலும் நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

மேலதிக தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/virtualschool அத்துடன், பின்தொடருங்கள் Twitter @tdsbvs.

## மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்க்கை: அமைதியைக் கண்டறிதல்

எங்களின் அன்றாட வாழ்க்கையில், குறிப்பாக மெய்நிகர் கற்றலில் பங்கேற்பதற்காக இணையத்தில் நாங்கள் அதிகமாக இருக்கும்போது அமைதியைக் கண்டறிவது சவாலானதாக இருக்கலாம். உங்களைக் கவனித்துக்கொள்வதில் மன அமைதி முக்கியதொரு பங்கெடுக்கிறது - எங்களுக்காக ஒரு கணம் எடுத்துக்கொள்வது எங்களின் கவனத்தை மீளமையப்படுத்தவும் எங்களின் சக்தியை மீட்டெடுக்கவும் உதவுகிறது.

உங்களின் நாளில் அமைதியைக் கண்டறிவதற்கு ஒன்ராறியோப் பாடசாலைகளுக்கான மன ஆரோக்கிய அமைப்பின் சில ஆலோசனைகள் இதோ.

உங்களிடம் **ஒரு நிமிடம்** இருந்தால்:

**நிகழ்காலத்தில் இருங்கள்**. இடைநிறுத்துங்கள். உங்களின் காலணிகளுக்குள் உங்களின் பாதங்களை உணருங்கள். உட்கார்ந்திருந்தால், உங்கள் பாதங்களைத் தரையில் லேசாக அழுத்துங்கள்.

**நினைவுகொள்ளுங்கள்**. உங்களின் முகத்தில் சிரிப்பை வரவழைப்பவர் யார்? ஒரு கணத்துக்கோ அல்லது சில கணங்களுக்கோ அவரை மனதில் நினையுங்கள்.

உங்களிடம் **ஐந்து நிமிடங்கள்** இருந்தால்:

**நன்றி சொல்லுங்கள்.** நண்பர் ஒருவர் உங்களுக்கு உதவிய விடயம் ஒன்றுக்கு நன்றிதெரிவித்து அவருக்குக் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

**செவிமடுங்கள்.** ஆறுதலாக இருக்கும்போது, நீங்கள் கேட்கும் உங்களுக்குப் பிடித்த ஒரு பாட்டு இருக்கிறதா? அதைக் கேளுங்கள்!

**அந்தக் கணத்தில் இருங்கள்.** வழிகாட்டலுடனான இலவச mindfulness/meditation (தியானம்) பயிற்சிகளை இணையத்தில் கண்டறியுங்கள். உங்களுக்கு ஏற்றவகையில் (style) இருப்பனவற்றைத் தேடிப்பாருங்கள்.

**ஒழுங்குபடுத்துங்கள்.** 5 நிமிடங்களின் பின்னர் ஒலியெழுப்பும் வகையில் உங்களின் நேரக்கட்டுப்படுத்தியைத் (timer) தயார்செய்யுங்கள். உங்களின் வேலையிடத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஓய்வுநேரமொன்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

உங்களிடம் **10 நிமிடங்கள்** இருந்தால்:

**நாள்குறிப்பு.** நீங்கள் நன்றியாக இருக்கும் 10 விடயங்களை எழுதுங்கள்.

**உறிஞ்சுங்கள். சுவையுங்கள்.** உங்களுக்குப் பிடித்தமான ஒரு குவளை தேநீர் அல்லது ஏனைய பானங்களைத் தயாரித்து அருந்துங்கள்.

**பிரச்சினையை நடந்து தீர்த்தல்.** நீங்கள் வாழும் இடத்தைச் (block) சுற்றி ஓர் உலாப் போங்கள்.

**நடனமாடுங்கள்.** உங்களை ஆடவைக்கும் உங்களுக்குப் பிடித்த ஒரு பாடல் இருக்கிறதா? அதைக் கேளுங்கள். மீளவும் அதைக் கேளுங்கள்.

உங்களிடம் **30 அல்லது அதற்கும் அதிகமான நிமிடங்கள்** இருந்தால்:

**நண்பர் ஒருவரைத் தொலைபேசியில் அழையுங்கள்.** அவர் எப்படி இருக்கிறார் எனக் கேளுங்கள். அத்துடன் உங்களின் எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிருங்கள்.

**வியர்க்க வழிசெய்யுங்கள்.** நடவுங்கள், ஓடுங்கள், பாரங்கள் தூக்குங்கள். நீங்களே தெரிவுசெய்யுங்கள்.

**உடலை நீட்டி மடக்குங்கள்.** இணையத்தில் இலவச யோகா வகுப்பு ஒன்றைக் கண்டறியுங்கள்.

**சிரியுங்கள்.** வேடிக்கை நிறைந்த படம், நிகழ்ச்சி அல்லது YouTube வீடியோ ஒன்றைப் பாருங்கள்.

உங்களின் மனநலம் மற்றும் நல்வாழ்க்கைக்கு ஆதரவளிக்கும் ஆதாரவளங்கள் சிலவற்றைப் பாருங்கள்.

## TDSBஇல் இணையத்தில் கற்றல்: Google Meet & Zoom தொடர்பான பாதுகாப்பு அம்சங்கள்

மாணவர்களின் பாதுகாப்புக்கு TDSB முன்னுரிமையளிக்கிறது, அத்துடன் இணையக் கற்றல் அமர்வுகள் அனைத்தும் பத்திரமாக இருப்பதையும், அதில் பங்குகொள்ளும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பாதுகாப்பாக இருப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்கிறோம்.

Google Meet அல்லது Zoom இணைய உரையாடல் கருவிகளைப் பயன்படுத்தும்போது எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி TDSBஇன் அனைத்து ஆசிரியர்களும், அதிபர்களும், உப அதிபர்களும் அறிந்திருக்கிறார்கள். அத்துடன் மாணவர்களுடனான சந்திப்புக்களின்போது தேவையற்ற நபர்கள் நுழைவதைத் தடுப்பதற்காகப் பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அவர்கள் செயல்படுத்துகிறார்கள்:

- **Google Meet**: TDSBஐச் சார்ந்திராதவர்கள் சந்திப்புக்களுக்குள் நுழைவதை அதை நடத்துபவர்/ஆசிரியர் தடுக்கமுடியும். தேவைப்பட்டால், பங்குபற்றுபவர்கள் திரையைப் பகிர்வதையும் தங்களுக்குள் உரையாடுவதையும்கூட அவர்கள் தடுக்க முடியும்.
- **Zoom**: அதை நடத்துபவர்/ஆசிரியர் காத்திருப்பு அறைகளை உருவாக்கலாம் மற்றும் TDSBஐச் சார்ந்திராதவர்கள் சந்திப்புக்களுக்குள் நுழைவதைத் தடுக்கலாம். கட்டுப்படுத்தக்கூடிய பல்வேறு பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் சந்திப்புக்களுக்குள்ளேயேகூட இருக்கின்றன (உ+ம். பேசும் ஒலி கேட்காமல் செய்தல், பங்கேற்பாளர்களை நீக்குதல் போன்றவை).

Google Meet அல்லது Zoom அமர்வின்போது ஆசிரியர் ஒருவருக்கு மற்றும்/அல்லது மாணவர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பான ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், அந்தப் பிரச்சினை ஆராயப்பட்டு ஆதரவுகள் வழங்கப்படுவதற்காக அதிபர் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கு உடனடியாக அது அறிவிக்கப்படும். இணையக் கற்றல் நேரத்தில், நாங்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் இருத்தலும் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தொடர்ந்து ஒன்றிணைந்து செயல்படலும் அவசியம்.

## சமூகமளித்தல் மற்றும் பாதுகாப்பான வரவு

மாணவர்களின் வருகையைக் கண்காணிப்பதற்கு உதவுவதற்காக அழைப்புக்களை தானாகத் தினசரி செயல்படுத்தும் அமைப்பின் செயல்பாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை நினைவூட்டுகிறோம். ஒன்ராறியோவில் தற்போது இருக்கும் அவசரகாலநிலைப் பிரகடனத்தைக் கருத்தில்கொண்டு, வாழ்க்கை, வேலை, தொலைநிலைக் கற்றல், பிள்ளைப் பராமரிப்பு மற்றும் எண்ணற்ற பிற விஷயங்களை சமநிலையில் வைத்திருப்பதற்காக அனைவரும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் குடும்பத்தவர்களுக்கு மேலும் மனத்தகைப்பை வழங்க நாங்கள் விரும்பவில்லை. அனைத்து ஆசிரியர்களும் தினமும் இரண்டு முறை வருகையைத் தொடர்ந்தும் பதிவிடுகின்றனர். ஆரம்பத் திகதி உறுதிசெய்யப்பட்டதும் மேலதிகத் தகவல்கள் பகிரப்படும்.

## மெய்நிகர் பாடசாலைகளின் பணியாளர் விபரக்கொத்து

மெய்நிகர் பாடசாலை நிர்வாகக் குழுவினர் விபரக்கொத்துக்கள் இணையத்தில் உள்ளன, அவை தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றன. இந்த ஜனவரியில், பல புதிய பணியாளர்கள் குழுக்களில் இணைந்துள்ளனர். சமீபத்திய விபரக்கொத்துக்களுக்குத் தொடர்ந்து கீழே பகிரப்பட்டிருக்கும் இணைப்புகளைத் தயவுசெய்து பாருங்கள். ஆரம்பநிலைப் பாடசாலைகளின் ஒவ்வொரு கற்றல் மையத்திலும் உப அதிபர் மற்றும் அதிபர்கள் தரங்களின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கற்றல் மையம் 1 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை
கற்றல் மையம் 2 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை
கற்றல் மையம் 3 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை
கற்றல் மையம் 4 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

## நினைவூட்டல்: மெய்நிகர் பாடசாலை நடத்தை விதி

நேரில் கற்றலின்போது, ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு மற்றும் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு இருக்கும் அதே பொறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகள், வீட்டிலேயே மெய்நிகர் கற்றல் நடைபெறுகையிலும் இருக்கும். ஏற்கனவே இருக்கும் TDSB இணையக் கற்றல் நடத்தை விதிகள் போன்ற சபைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளையும் இது உள்ளடக்குகிறது.

பாடசாலைகள்/கல்வி புகட்டுவோர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களை வழங்கும் TDSB இணையக் கற்றல் நடத்தை விதிகள் என்பதையும் தயவுசெய்து பாருங்கள்.

## ஜனவரி தமிழ் மரபுத் திங்களாக இருக்கிறது

ஒக்ரோபர் 2016 முதல் தேசியரீதியாகவும், மார்ச் 2004 முதல் மாகாணரீதியாகவும், ஜனவரி 2016 முதல் TDSB இலும் தமிழ் மரபுத் திங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்ட கனேடியர்களின் மிகவும் முக்கியமான கொண்டாட்டங்களில் ஒன்றான, அறுவடைக் கொண்டாட்டமாகிய தைப் பொங்கலுடன் இது இணைந்திருப்பதால் ஜனவரி மாதம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான தமிழ் மக்கள் மத வேறுபாடுகள் எதுவுமின்றித் தைப் பொங்கலைக் கொண்டாடுகிறார்கள், அத்துடன் அபரிதமான அறுவடைக்கு நன்றி தெரிவிக்கின்றார்கள்.

![tdsb Virtual Schools]

**ஜனவரி 2021**

திட்டமிடலுக்கான தன்னார்வத் தொண்டர்கள் குழுவினரால் தெரிவுசெய்யப்பட்ட இந்த வருடத்துக்குரிய கருப்பொருள்கள், **உண்மை - உரிமை – ஒற்றுமை: Truth - Rights – Unity. Unmai (உண்மை)** எங்களின் வாழ்க்கை அனுபவங்கள்தான் எங்களின் உண்மைகள் என்பதை அங்கீகரிக்கிறது, அத்துடன் இந்த உண்மைகள் எங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய எங்களின் புரிதலை உருவாக்குகின்றன. மேலும் அறியுங்கள்.

## 2021-22 இல் விருப்பத்துக்குரிய பாடசாலைக்குச் சமூகமளித்தல்

தற்போதிருக்கும் மாகாணரீதியான அவசரகாலநிலைச் சூழல் கட்டுப்பாடுகளின் கீழ் விருப்பத்துக்குரிய பாடசாலைக்குச் சமூகமளித்தல் தெரிவுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதைத் தெளிவுபடுத்தும் மின்னஞ்சல்கள் இந்த மாதத் தொடக்கத்தில் குடும்பத்தவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. 2021-2022 பாடசாலை ஆண்டில் வேறொரு பாடசாலைக்கு அல்லது திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் அனைத்து மாணவர்களும்/குடும்பத்தவர்களும் அவ்வாறு செய்யமுடியும் என்பதை இந்தச் செயல்முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள் உறுதிசெய்யும். மேலும் அறியுங்கள்.

## பாலர்வகுப்புகளுக்கான பதிவுகள்

TDSBஇல், பெப்ரவரி மாதம் பாலர் வகுப்புகளுக்குப் பதிவுசெய்யும் மாதமாகும்! மேலதிக தகவல்களுக்கும் பதிவுசெய்வதற்கான தெரிவுகள் பற்றி அறியவதற்கும் தயவுசெய்து பார்வையிடுங்கள் www.tdsb.on.ca/kindergarten.

## செய்திகளில் மெய்நிகர் பாடசாலைகள்

TDSB மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலைகள் பற்றிய ஆர்வமூட்டும் சில செய்திகளை அறியுங்கள்:

- CTV: Front-line workers join Grade 1 virtual class
- CTV News at 6
- CBC Metro Morning: Virtual gym class gets creative

## தொழில்நுட்பரீதியான விடயங்கள்

மெய்நிகர் கற்றலுக்கான IT ஆதரவை அணுகுவதற்கு, பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/In-Person-Learning/Student-Virtual-Learning-IT-Support

## தொடரும் தொழில்முறைக் கற்றல்

நான்கு மெய்நிகர் பாடசாலைக் கற்றல் மையங்களிலும், பின்வரும் உதாரணங்கள் உள்ளடங்கலான தொழில்முறைக் கற்றலுக்கான வாய்ப்புகளில் ஆசிரியர்கள் தொடர்ந்து பங்கேற்கின்றனர்:

- தொடர்ந்துகொண்டிருக்கும் தனிப்பட்ட உதவி-வழிகாட்டுதல்
- வாசிப்பில் ஆரம்பத்திலேயே இடையீடு செய்வதற்கான பயிற்சி
- உள்ளடக்கத்துக்கான வாசிப்பு
- உதவிவழங்கும் தொழில்நுட்பம்
- பிரெஞ் மொழிப் பாடத்தில் சமத்துவம் மற்றும் உள்ளடக்கல்
- பிரெஞ் மொழி மூலமான கற்றலில் எழுத்தறிவுக்கான புதிய வளங்கள்
- கலைப் பட்டறைகள்
- பதின்மவயதினரின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
- தொடங்குபவர்களுக்கான குறியீட்டு முறை
- அத்துடன் இன்னும் பல!